
வெளியீடு எண்—1.

உ

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் துணை.

# ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் வாழ்க்கை வரலாறு.



பன்னிரு திருமுறை மன்ற முதலாண்டு விழாவில்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் திருவுருவப் படத்

திறப்புவிழா

நினைவு மலர்

**30—12—1955.**

பதிப்பாசிரியர் : சிவஸ்ரீ. ம. க. சுந்தரேசபட்டர் அவர்கள்

தலைவர், பன்னிரு திருமுறை மன்றம்,

மதுரை.

உ

சிவ சிவ

# ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வரலாறு

ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகள் ஸ்ரீவைகுண்டத்தில் அவதரித்தார்; திருச்செந்தூர் முருகப்பெருமான் அருளால் ஐந்தாவது ஆண்டில் ஊமை நீங்கிக் 'கந்தர் கலிவெண்பா'ப் பாடி அருள் பெற்றார்; மதுரை மீனாட்சியம்மை மீது 'பிள்ளைத் தமிழ்' பாடி அம்மையால் முத்தாரம் அணியப் பெற்றார்; திருமலைநாயக்க மன்னன் விருப்பத்திற்கு இணங்க 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலை அருளினார்; தருமை ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை வழிபட்டுப் 'பண்டார மும்மணிக் கோவை' பகர்ந்தார்; ஆரூர், வேளூர், தில்லை தரிசித்து, மாலை, கோவை முதலியன பாடினார்; காசி சென்று, 'சகலகலாவல்லி மாலை,' 'காசிக் கலம்பகம்' முதலியன அருளினார்; சிங்கத்தின் மீதேறிச் சென்று முகலாய மன்னனைக் கண்டு அவன் உதவியால் கேதார மந்திரம், கேதாரத் துறை, அறச்சாலை முதலியன அமைத்தார்; வெள்ளியம்பலவாணத் தம்பிரான் முதலியோருக்கு வித்யா குருவாகத் திகழ்ந்தார்.

செயற்கரிய செயல்கள் பல புரிந்த குமரகுருபர முனிவர் பெருமானின் நினைவு உலகுக்குச் சிவநெறி காட்டி இன்பம் பயக்கும்.

---

சிவ சிவ

# ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

## வாழ்க்கை வரலாறு.

வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற் காவிரி பல கால்களாய் ஓடி வளப்படுத்தும் சோழவள நாட்டிலே கண்பொலி நெற்றியினன் கோயில் கொண்டுள்ள திருத்தலங்களுள் தண்வயல் சூழ்த் திருப்பனந்தாள் ஒன்று. திருத்தாடகை யீச்சரத்து எம்பெருமானைக் குங்கிலியக் கலயரும் இத்தலத்தில் வழிபட்டிருக்கிறார். இத்திருத் தலம் இன்னொரு சிறப்புமுடையது. தென் குமரி முதல் வட இமயம் வரை குன்றின் மேலிட்ட விளக்குப்போலப் புகழ் பொருந்தித் திகழும் ஸ்ரீ காசிமடம் இத்திருத் தலத்திலே உள்ளது. தமிழும், சைவமும் சிறப்புறப் பல்லாற்றானும் தொண்டுகள் புரிந்துவரும் முனிபுங்கவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் இப்பொழுது தலைவராக வீற்றிருந்தருளும் பேறு பெற்றது இக்காசிமடம்.

ஸ்ரீகாசிமடத்து முதற்குரவர் பதினேழாம் நூற்றாண்டில் திகழ்ந்த ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் என்பது யாவரும் அறிந்ததே. இத்தவராஜ சிங்கமாகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் காசியில் ஸ்ரீ குமாரசாமி மடம், கேதார கட்டம் முதலியவற்றை நிறுவிய அருளாளர். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுக்கு அடுத்த ஆறுவது தலைமுறையில் வந்தவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ தில்லைநாயக சுவாமிகள் அவர்கள் திருப்பனந்தாளில் காசிமடத்தை நிறுவினார்கள் என்ப. ஸ்ரீ காசியில் நடத்தவேண்டிய அன்னம் பாலிப்பு முதலிய அறங்கள் திருப்பனந்தாளைச் சூழ்ந்த ஊர்களிலிருந்து

வரும் வருவாயைக் கொண்டு நடத்தப் பெறவேண்டியமை யின் திருப்பனந்தாளில் மடம் ஸ்தாபித்தார்கள் என்று ஊகிக்க இடம் உண்டு. ஸ்ரீ காசிமடம் செய்யும் தொண்டு கள் பல துறைகளிலேயும் பரவியுள்ளன. ஸ்ரீலஸ்ரீ காசி வாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுடைய மன விரிவின் எல்லையே ஸ்ரீ காசிமடத்து அறப்பணிகளின் எல்லையாகும்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 1900-ஆம் ஆண்டில், வள்ளன்மையால் மிக்கிருக் கும் தாளாளர்களாகிய தொண்டைமண்டல சைவ வேளாளர் குடும்பத்தில் தோன்றியவர்கள். செந்தமிழ்நாடு எனப்பெறும் பாண்டி வளநாட்டில் அரியநாயகிபுரம் என்ற ஊரே அவர்களைத் தந்த பேறு பெற்றது. அவ்வூர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுக்கும் தொடர்புடையது என் பது வாசகர்கள் அறிந்திருக்கலாம்.* இவ்வூர் திருநெல் வேலி மாவட்டத்திலுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் இளமையில் திருநெல் வேலி இந்துக் கல்லூரியில் கல்வி கற்றவர்கள். இளமை யிலேயே இவர்களுடைய தாய் இறந்துபோனார்கள். தாயன்பு இளமையிலேயே இழந்து இவர்கள் மிகக் கலக்கமுற்றிருந்த காலத்தில் முதல் உலகப் போர் தொடங்கியது. அலமரும் நெஞ்சம் போர்ப்படையில் சேரத் தூண்டியது. பல போர்க் களங்களிலேயும் இவர்கள் தொண்டாற்றினார்கள் போலும். போர் முடிந்தது; படையிலிருந்தும் விலகினார்கள்; அரசியல் அலுவலும் ஏற்றுக்கொண்டார்கள்; ஒரு சில இடங்களி லேயும் அலுவல் பார்த்திருக்கக்கூடும். எனினும் தாம் விரும்பிய மனச்சாந்தி அங்கு எங்ஙனம் பெற இயலும்! ஆகவே அலுவலை வாவு பெற்று அகன்றார்கள்; அண்ணா மலையான் அடிக்கமலத்தை இறைஞ்ச ஏகினார்கள்; எல்லை யில்லா ஆனந்தத்தில் அமிழ்ந்து, வாவு பெற்றிருந்த எல்லையையும் கடந்தமையின் ஏன்ற அலுவல் ஆன்றகன்

* ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மதுரையில் நீதிநெறி விளக்கம் பாடி னார்கள். புலவர் முற்றூட்டாக இவ்வூர் குமரகுருபர சுவாமிகளுக்குத் திருமலை நாயக்கரால் அளிக்கப்பெற்றதென்பது வரலாறு.

றது. இறையருள் விளைந்த மனம் மதுரையில் திருநெறிய தமிழைப் பண்ணொன்ற ஓதியது. இன்றும் தேவாரப் பண்ணொலி அவர்கள் திருவாயினின்று கேட்கும் பேறு சிலருக்குக் கிடைத்துள்ளது; எங்கும் நிறைபவன் இடையறாது கேட்கின்றார். திருநெறிய மெய்ஞ்ஞானத் திருமுறைகளை நன்கு ஓதி உணர்ந்தபிறகு திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்று ஆங்கு இவர்கள் சிலகாலம் தங்கியிருந்தார்கள். பின்னர் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சென்று அங்கு ஞானச் செங்கோலோச்சி வந்த மகா சன்னிதானம் 23-வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களிடம் ஞானதீக்ஷை பெற்று "தருமையில் ஞானப்பிரகாசன் நல் தொண்டருள்" ஒருவரானார்கள்.

இவர்களுடைய ஒப்புயர்வில்லா அறிவும் ஆற்றலும் கண்டு மகிழ்ந்த தருமையாதீனத் தலைவர்கள், சுவாமிகள் அவர்களைத் தமக்குச் சொந்தமான பல தேவஸ்தானங்களில் கட்டளைத் தம்பிரான் சுவாமிகளாக நியமனம் செய்து சிறப்பித்துள்ளார்கள். ஆதீனச் சார்பிலே சைவ சமயத் தொண்டு ஆற்றவேண்டிய இடங்களுக்கெல்லாம் இவர்களையே அனுப்பியுள்ளார்கள். தூய தமிழில் சைவ சித்தாந்தக் கருத்துக்களைக் கேட்போர் மனங்கொளப் பேசும் ஆற்றல் படைத்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளுடைய சொற்பொழிவுகளைப் பல்லாயிரக்கணக்கான சைவப் பெருமக்கள் கேட்டுப் பயனடைந்துள்ளார்கள். தருமையாதீன அடியார் குழாத்துள் இவர்கள் போன்று சொல்லாற்றல் படைத்தவர்கள் வேறு ஒருவரும் அச்சமயம் இருந்திலர். தருமையாதீன அடியார் குழாத்துள்ளார்கள் அனைவரும் இவர்கள்மாட்டுள்ள நற்பண்புகளைப் பாராட்டி அன்புடன் போற்றுவார்கள்.

இங்ஙனம் பல்லாற்றானும், அடியார்குழாத்துள் சிறப்புற்றுச் சைவசமயத் தொண்டு ஆற்றிவந்த காலத்தில் செந்திலாண்டவன் திருவருள் இருந்தபடி ஆலவாய் அண்ணல் திருவருள் நோக்கத்தால் ஸ்ரீ காசிமடத்து 19-வது தலைவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தமக்குப் பிறகு தாம் ஆற்றிவரும்

நற்பணிகளைச் சிறந்த முறையில் ஆற்றத்தக்க பேராற்றல் படைத்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களே என்று அறிந்து தமக்குப் பிறகு காசிமடத்துத் தலைவராக ஆக வேண்டுமென்று நியமனம் செய்தார்கள். தருமை ஆதீன ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானம் அவர்களும் திருவுளம் பாலித்து உத்தரவும் அளித்தார்கள். 1944-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 26-ம் தேதி ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் சிவப்பேறடைய, இவர்கள் காசிமடத்துத் தலைவராக எழுந்தருளினர்கள்.

நாத்திகம் பேசி நாத்தழும்பேறிய மக்கள் நாத்திகத்தினின்று சமய உணர்ச்சி பெறவேண்டுமாயின்—எதிர்காலத்தில் மக்கள் சைவ உணர்ச்சியோடு வாழவேண்டுமாயின் மக்கள் இளமையில் சமய நெறியில் வளருதல் வேண்டும். இளமையில் சமய அறிவு பெருதவர்கள் முதுமையில் சமயச் சார்பு உடையவர் ஆயினும் சமய உறைப்புப் பெற முடியாது. சமயத்தோடு ஒன்ருத வாழ்க்கை சிறப்புடைய வாழ்க்கையாகாது. எனவே இளமையிலேயே மக்கள் சமய அறிவு பெறுவதின் இன்றியமையாமையை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் நன்ருக அறிந்தார்கள். பல திருத்தலங்களில் தேவாரம், திருவாசகம், திருக்குறள், நீதிநெறி விளக்கம், அபிராமியந்தாதி, தாயுமான சுவாமிகள் பாடல், முதுமொழி மேல் வைப்பு முதலியவற்றை நன்கு படித்துத் தேர்ச்சி காட்டும் மாணவ, மாணவிகளுக்குப் பரிசு அளித்தற்குப் பல நிதிகளை ஏற்படுத்தியிருக்கிருர்கள். பெண்கள் சமய உணர்ச்சி உடையோராயின் அவர்கள் ஈன்றெடுக்கும் குழந்தைகளும் சமயத்தோடு ஒன்றி வாழ்வார்கள். ஆகையால் பெண்களும் சிறந்த கல்வி கற்கவேண்டுமென்ற நன்னேக்கத்துடன் பெண்களுக்கென்றே சில பரிசுத் திட்டங்களையும், உதவித் தொகைகளையும் ஏற்படுத்தியுள்ளார்கள். தம்முடைய 11 ஆட்சி ஆண்டுகளுக்குள் ஏறக்குறைய 200 பேரறக் கட்டளைகளை சுமார் 33 இலட்சம் ரூபாய் மூலதனத்தில் ஏற்படுத்தியுள்ளார்கள். இக்கட்டளைகளிலிருந்து வரும் வருமானம் எல்லாம் தமிழ் - சைவ சித்தாந்தம் - கல்வி - திருமுறை வளர்ச்சி - மருத்துவம் முதலிய பல துறைகளிலேயும் செலவு செய்யப்படுகின்றது.

இவர்களுடைய கட்டளைகள் சென்னை, அண்ணாமலை, காசி, திருவிதாங்கூர், கல்கத்தா, அலகபாத், லக்நௌ, ஆக்ரா, டெல்லி முதலாய பல பல்கலைக்கழகங்களிலும் ஏற்படுத்தப் பட்டுள்ளன என்பது அறியத்தகும்.

இமயத்து அடிவாரம் ஆகிய ஹரத்துவாரிலும், இவர்களுடைய கட்டளை ஒன்று இருக்கிறதென்று கேள்விப்படும் பொழுது இவர்களுடைய திருவடி தோயும் திருக்கேதாரம் வரையிலும் இவர்களுடைய கட்டளைகள் பரவும் என்பது மிகையாகாது.

அப்பூதி அடிகள் திருநாவுக்கரசர் பெயரால் தண்ணீர்ப் பந்தல் அமைத்தார்! ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளோ அப்பர், அப்பூதி அடிகள், குங்கிலியக் கலயர், குமர குருபர சுவாமிகள், கலயனார், சண்டேசர் முதலியவர்கள் திருப்பெயர்களால் பல இடங்களில் தண்ணீர்ப் பந்தல்களை அமைத்து முந்தையோர் நினைவை ஆலவாய்ச் சொக்கலிங்கத்தின் திருவருளால் செக்கர்வான்போலச் சிறப்பித்துள்ளார்கள். 'கண்டபெரு மந்திரமே மூவர்பாடல்' ஆகையாலும், திருமுறைகள் ஆலவாய்ச் சொக்கருக்குப் பெரு விருப்பத்தைத் தருவதனாலும், ஆலவாய் அமர்ந்துறை ஆதியின் பெருமை ஞாலமெலாம் பரப்புவதற்குப் பயன் படுவது மூவர் ஓது தமிழாகையினாலும், சோழப் பெரு மன்னர் இறைவன் திருமுன் திருப்பதிகம் விண்ணப்பிக்க நிபந்தங்கள் ஏற்படுத்தியதுபோலக் காஞ்சீபுரம், சிதம்பரம் ஸ்ரீவைகுண்டம், மதுரை ஆகிய இத்தலங்களில் திருமுறை வாணர்களை நியமித்து நாடோறும் இறைவன் திருமுன் திருமுறைகளை ஓதச்செய்கின்றார்கள்.

மதுரையில் ஏறக்குறைய 14 கட்டளைகளை நியமித் திருக்கிறார்கள். தேவாரப் பரிசு, நீதிநெறி விளக்கப் பரிசு, திருவாசகப் பரிசு, முதுமொழிமேல் வைப்புப் பரிசு இவை மாணவ, மாணவிகளுக்கென்று ஏற்படுத்தப்பட்டவை. திருவிளையாடற் புராணப் பிரசங்க நிதி, பெரியபுராணப் பிரசங்க நிதி, கந்தபுராண பிரசங்க நிதி இவை சைவப் புலவர்களுக்கும் சைவப் பெருமக்களுக்கும் ஏற்படுத்தப் பட்டவை. மதுரையில் தேவாரநிதி திருப்பதிகம் விண்ணப்பம் செய்வதற்காக ஏற்படுத்தப் பெற்றது. சந்தன

மெய்ப்பூச்சு நிதியென்ன, திருவாதவூரில் அன்னம்பாலிப் பென்ன, செந்திலாண்டவன் நினைவால் ஆவணிமூல அன்னம்பாலிப்பென்ன இவை அன்னம்பாலிப்புகளுக்காம். அன்று இந்திரன் பொற்றாமரை வாவியில் பொற்றாமரை யைப் பெற்றான்; இன்று ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் அருளால் பொற்றாமரை மிதக்கக் காண்கிறோம். திருவள்ளுவர் திருக்குறள் மதுரையில் அரங்கேற்றப் பெற்றதென்பார்கள்; திருக்குறள் கல்லெழுத்து பொற் றாமரை வாவிக்கரையில் பதிக்கப்பெற்றுள்ளது. மன்னன் சுரநோயை தீர்த்தது திருநீற்றுப் பதிகம்; அவனுடைய கூனையும் அதுவே தீர்த்தது. அப்பதிகம் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் பொறிக்கப் பெற்றுள்ளது. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் அரங்கேற்றிய காலத்தில் அம்மை குழந்தை வடிவில் எழுந்தருளி முத்தாரம் அளித்துப் பெருமைப்படுத்தினா ராம்! அப்பிள்ளைத்தமிழ்ப் பாடல்களும் கோயிலில் காண லாம். மதுரைக்குக் கடம்பவனம் என்றும் பெயர் உண்டு. தமிழ் மதுரையின் தலவிருட்சம் கடம்பு ஆகும். குமர குருபர சுவாமிகளும் கடம்பவனச் சொக்கரென்றே பாடி யிருக்கின்றார். அக்கடம்பமரம் அழியாச் சின்னமாயிருத்தல் வேண்டுமென்றெண்ணி வெள்ளிக் கவசம் அணிவித்துக் காத்துள்ளார்கள்.

இடையறாது சிவசிந்தையுடையவர்களாகிய சுவாமிகள் அவர்கள் மக்கள் அனைவரும் 'சிவ சிவ' என்று தெரிந்தோ தெரியாதோ — விரும்பியோ விரும்பாதோ கூறவேண்டு மென்ற எண்ணத்தால் பல திருக்கோயில்களிலும் சிவ சிவ விளக்கினையும், அவ்வத்தலங்களின் தேவாரங்களை ஓதவேண்டுமென்ற விருப்பினால் பல தேவாரக்கல் வெட்டுக்களையும் அமைத்துள்ளார்கள்.

பசுக்கள் நாட்டின் செல்வம். பசுக்களைப் போற்றியே சண்டேசர் சிறப்புப் பெற்றார். ஞானசம்பந்தரும் திருப் பாசுரத்தில்* ஆனினம் வாழ்க என்று அருளியுள்ளார்கள்.

---

* திருஞானசம்பந்தர் அருளிய திருப்பாசுரத்தைத் தருமபுரம் ஆதீ னம் 25-வது மகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் மதுரைத் திருக்கோயிலில் சிலாசாசனம் செய்துள்ளார்கள்.

இத்தகைய சிறப்புடைய பசுக்களைப் போற்றுபவர்களுக்கென்று மதுரையிலும், காஞ்சீபுரத்திலும், திருவாரூரிலும் நிதிகளை ஏற்படுத்திப் பரிசுகளை அளித்து வருகிறார்கள்.

திருஞானசம்பந்தர் திருக்கேதாரத்தைத் பாடிய பனுவல் ஒன்றுண்டு; சம்பந்தர் சென்று கண்டு பாடினதாக வரலாறு இல்லை. இன்றும் கேதாரத்திற்குச் சென்று வருவது எளிதன்று. ஆனால் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களோ ஆண்டொன்றுக்கு இருமுறை சென்று வருவது நாம் அறிவோம். காசிவாசி என்ற தம் திருநாமத்திற்கேற்ப ஒரு ஆண்டில் நான்கு திங்களேனும் காசியில் வாசம் செய்கிறார்கள். பூவொடு நீர் சுமந்தேத்திச் சென்ற அப்பர் வாக்கிற்கிணங்கக் கேதாரேஸ்வரரையும், பதரிநாதரையும், உத்தரகாசிப் பெம்மானையும் விசுவநாதரையும் சுரும்பார் மலர் இண்டைகட்டி வழிபாடு செய்து வருகிறார்கள்.

"ஒழுக்கம் விழுப்பந் தரும்." நல்லொழுக்கங்களின் உறைவிடம் என்று இவர்களைக் கூறலாம். ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் பனியென்றும் பாரார், குளிரென்றும் கருதார், வெயிலென்றும் நினையார், மழையென்றும் சோரார், எப்பொழுதும் ஒரே நிலையில் நிலையான முறையில் ஒழுகலாறுகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளார்கள். ஓய்வுக்காலங்களெல்லாம் சிவசிந்தனைக்குரிய காலம். தம்முடைய நிர்வாகத்திலேயும் சிவனை இடையறுது நினைப்பார்கள். இவர்களுக்கு விருப்பு வெறுப்பு இரண்டுமில்லை. எனினும், சோம்பலை வெறுப்பார்கள். வீண்பேச்சைக் கடிவார்கள். அத்தகையோர்களுக்கு இவருடைய நிர்வாகத்தில் இடமில்லை.

குருவருள் நிரம்பப் பெற்றவர்களாகிய இவர்கள் அவ்வப்போது குருதரிசனம் செய்துகொள்வார்கள். துறவு நிலையை எய்துவதற்குக் குருவே உறவன்றித் துறவுக்கு முன்னிருந்த உறவினர் உறவினராகார். இது இவர்களுடைய வாழ்க்கை ஒன்றிலேயே நாம் காண்கின்றோம்.

சைவத்திற்கு இரு கண்களாகத் திகழ்பவை திருமுறைகளும் சாத்திரங்களுமே. இறைவனை அடைவதற்குத் திருமுறைகளே சாதனங்களாகும். திருமுறைகளைப் பரப்பத்

தேவார நிதிகளை அமைத்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் ஐம்பதுக்கு மேற்பட்ட சிவ சம்பந்தமான நூல்களை அச்சிட்டு இலவசமாக அருளியுள்ளார்கள். இவைகளில் பன்னிரு திருமுறைகளும் இடம் பெற்றுள்ளன என்று கூறவும் வேண்டுமோ! பன்னிரண்டு திருமுறைகளையும் அச்சிடுவதற்கு ஒரு நிதி அமைத்துள்ளது இங்குக் குறிப்பிடுதல் தகும். பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும் என்பதற்கேற்ப பன்னிரண்டு திருமுறைகளையும் பன்னிரண்டு கண்களாகப் போற்றும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களை மதுரைப் பன்னிரு திருமுறை மன்றம் போற்றவேண்டுமென நினைத்தது. அவ்வெண்ணத்தின் விளைவே இச்சிறு வெளியீடு.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களை நினைப்பதும் ஒரு நல்ல புண்ணியம். அவர்கள் பெயரை இடையறாது சொல்லுதலும் ஒரு நல்ல செயல். இவற்றை நினைத்தே அவர்களுடைய திருப்பெயரால் நூல் நிலையம் இப் பன்னிரு திருமுறை மன்றத்தில் அமைத்திருக்கிறது; அவர்களுடைய திருவுருவப் படத்தையும் திறந்து வைத்துள்ளது. அவர்களுடைய திருவுருவத்தைக் கண்டு தரிசித்து, அவர்களுடைய வரலாற்றைப் படித்துச் சைவநன்மக்கள் உய்வார்களாக!

சிவ சிவ


# திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்
## ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி
## அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
## நிறுவிய தருமங்கள்

| எண் | தரும விவரம் | | | மூலதனம் ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | திருமுறை வளர்ச்சிக்காக | 24 | தருமங்கள் | 3,29,000 |
| 2. | கல்வி அபிவிருத்திக்காக | 43 | ஷை | 5,53,700 |
| 3. | சைவ சித்தாந்தம் பரப்ப | 7 | ஷை | 1,56,000 |
| 4. | அன்னதானம் செய்ய | 76 | ஷை | 17,74,500 |
| 5. | வைத்தியம் செய்ய | 5 | ஷை | 1,22,500 |
| 6. | பொது தருமங்கள் — ஸ்நான கட்டம், அகதி நன்கொடை, தண்ணீர்ப் பந்தல், ஒளிவளர் விளக்குகள், பசுப் பரிசு, கல்லெழுத்து முதலியன | 41 | ஷை | 2,94,745 |
| | ஆகத் தருமங்கள் | 196-க்கு | | 32,30,445 |

## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க ; அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க ; குக்குடம் வாழ்க ; செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க ; யானை தன் அணங்கு வாழ்க ;
மாறிலா வள்ளி வாழ்க ; வாழ்கசீர் அடியார் எல்லாம்.

—கந்தபுராணம்.



லலிதா பிரிண்டர்ஸ் லிமிடெட், மதுரை:-'55.